உ
சிவமயம்



அமரர்

# சின்னத்துரை பொன்னுத்துரை




அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "பொன் தீப மலர்"

23.12.2014

உ
சிவமயம்



நயினாதீவை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. சின்னத்துரை பொன்னுத்துரை

*அவர்களின் சிவபதபேறு குறித்த*

# பொன் தீபமலர்

**23.12.2014**

# சமர்ப்பணம்


எங்கள் குல தெய்வம்
இரட்டங்காலி இளமுருகன்
தங்கும் அருளுடனும்
தாய் வெளியின் நாகம்மை
பொங்கும் அலைகடல் சூழ்
தாய் நாகபூசணி அம்மை
துணையுடனும்
பொலிவுடனே வாழ்ந்திருந்த
தங்க பிதா மலர்தாள்
தலைசுமந்து சமர்ப்பித்தோம்.

*அவன் தாழ் வணங்கி*

*குடும்பத்தினர்*

உ

சிவமயம்



தோற்றம்
05.10.1937

மறைவு
23.11.2014

எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

# சின்னத்துரை பொன்னுத்துரை

அவர்களின்

## *திதி நிருணய வெண்பா*

*சீரோங்கு ஜெய வருடம் கார்த்திகை பிரதமையில்*
*வார்த்தை மகிழ் சின்னத்துரை பொன்னுத்துரை*
*சீர்த்திமிகச் சேர்ந்த பொன்னுத்துரை முருகனடி*
*நோற்றிட்டே சென்றான் நுகர*

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன கழல் தொழுதெழுவேன்
கடல் தனிலமு தொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எனை ஆளுமாறு
ஈவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உன தின்னருள்
ஆவடுதுறை அரனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலை புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்களுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீயாடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

### வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

### காயத்திரி மந்திரம்

ஓம் புர் புவ ஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்
திருச்சிற்றம்பலம்



# அமரர் திரு. சின்னத்துரை பொன்னுத்துரை அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழமணித்திருநாட்டில் யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்கும் நயினாதீவில் நாகம்மாள் அருள் ஆட்சி புரிவதும் நற்றவத் தொண்டவர் நாளெல்லாம் நாடித்துதிக்கும் பேறுடையதுமான நயினாதீவில் உயர்வேளாளர் பெருங் குடியில் பிறந்த அமரர் சின்னத்துரை சின்னம்மா தம்பதியினரின் புதல்வராக அமரர் சின்னத்துரை பொன்னுத்துரை அவர்கள் 1937 ஆண்டு ஐப்பசி மாதம் 05ம் திகதி பிறந்தார். அன்னாரின் குடும்பத்தில் ஏழு பெண் சகோதரிகளும் நான்கு ஆண் சகோதரர்களுமாக அவதரித்து வளர்த்து வருகையில் அன்னாரின் தந்தையார் அமரர் நாகமுத்து சின்னத்துரை அவர்கள் தனது சொந்தத் தொழிலாக வண்டில் மாடு அதனோடு விவசாயத் தோட்டத்தினையும், இணைந்த சங்கக்கடை ஒன்றையும் நடாத்தி வந்தார். அந்நாளில் அமரரது சகோதரி சின்னத்துரை (விசாலாட்சியும்) அமரும் இணைந்து தமது குடும்பத்திற்காக கடின உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் தமது தந்தை தாயினையும், தங்களோடு இணைத்து சகோதர சகோதரிகளையும் பராமரித்து வந்தனர். வளர்ந்து வருகையில் அமரர் சின்னத்துரை பொன்னுத்துரை அவர்கள் திண்ணைப் பள்ளியை நாகபூசணி வித்தியால யத்தில் தரம் 05 கல்வி பயின்று குடும்பத்தின் வறுமை காரணமாக தனது பத்து, பதினொரு வயதில் தனது சொந்தத் தொழிலாக வண்டில் மாட்டினை யும் விவசாய தோட்டத்தினையும் தனதாக்கிக் கொண்டார். இவரது கடின உழைப்பின் பயனாக இவரது சகோதர, சகோதரிகளுக்கும், மருமக்களுக்கும் ஓர் எல்லை வரம்பாகவும், உதவி செய்யும் மனோநிலையையும் அன்பான உறவுப் பாச பந்தத்தினையும், தீன் பண்டங்களையும் வழங்குபவராகவும் இவரை எல்லோரும் பொன்னுமாமா, பொன்னுச்சித்தப்பா, பொன் அம்மான், குஞ்சி பொன்னுத்துரை அப்பு என்று எல்லோரும் அன்பாகவும் பண்பாகவும் உறவு சொல்லுகின்ற ஒருவராகவும் சிரித்த முகத்தைக் கொண்டவரும் அமைதியான பண்பினை உடையவருமாக அமரர் அவர்கள் விளங்கினார்.

தனது வாழ்க்கை வயது திருமணப் பருவம் வந்திட்ட போதும் அமரர் அவர்களை அவ்வூரின் உறவுமுறைப் பெண்களைத் திருமணம் கேட்டு வந்த போதும் அன்னாரின் தந்தையார் அமரர் திரு. நாகமுத்து சின்னத்துரை அவர்கள் மகனாகிய அமரர் சின்னத்துரை பொன்னுத்துரை அவர்களுக்கு ஏதாவது வேறு கதைகளைச் சொல்லி திருமண நிச்சயத்தை கால வயது தாழ்த்தி தனக்கு ஓர் துணையாக அமரருடைய தந்தையார் வைத்திருந்தார். ஓர் சிறிய கதை ஒன்றினை இவ்விடத்தில் கூறுவதோடு அமரர் சின்னத்துரை பொன்னுத்துரை அவர்கள் தனது தந்தையாரை நோக்கி ஏன் அப்பு இன்னார் வந்து விட்டு ஏதோ கதைத்து கொண்டு போயினம்" ஏன் அப்பு வந்தவர்கள்" என வினாவினை? கேள்வி? யாகக் கேட்கும் போது ("அன்றைய நாள் அமரருக்கு திருமணம் பேசி வந்திருப்பார்கள் அவ்விடயத்தை நேரடியாகக் கூறாமல் "மகனே பொன்னுத்துரை" அவர்கள் உனது வண்டில் மாட்டில் சிவலமாட்டை அல்லது நரையன் மாட்டை விலைகேட்டு வந்தார்கள்". என வேறொரு கதையைக் கூறி தந்திரமாக! திருமணம் கேட்டு வந்த விடயத்தினை மறைத்து விடுவார். (தந்திரமாக)

இவ்வாறிருக்க அமரரோடு கூடப்பிறந்த சகோதரிகளின் விபரம் காலம் சென்றவர்களாகிய கோவிந்தப்பிள்ளை, நாகம்மா, விசாலாட்சி, நடராசா மற்றும் நல்லதம்பி (சுவிஸ்) செல்லம்மா, யோகாம்பிகை, சிவக்கொழுந்து, சிதம்பரம் (கனடா) வரலட்சுமி (அமெரிக்கா) ஆகியோர்களை உடன் பிறந்த அன்புச் சகோதர சகோதரிகளையும் அமரர் அவர்கள் கொண்டிருந்தார். பின்னாளில் சகோதர சகோதரிகளின் கடமைகளையும், பொறுப்பினையும் ஓரளவு சீர்படுத்திக் கொண்ட பின் அமரர் அவர்களுக்கு அவ்வூரின் வடக்கே வேளாளர் பெருங்குடியில் பிறந்த "இராமச்சந்திர மகிபன்" என்று போற்றப்படும் பெருமகனார் இவர் "நயினை நாகபூசணி அம்மன்" ஆலய "ஆரம்பகால பரம்பரை அறங்காவலர் சபைத் தலைவராக" இருந்தார். இவருடைய பரம்பரையில் வந்தவர் தான்.

அமரர் திரு.ப.இராமச்சந்திரருடைய பேர்த்தி யாரே அமரர் துரைச்சாமி+மங்களநாயகி தம்பதியினரின் மகளார் அமரர் திருவருட் செல்வியினை அமரர் திரு. பொன்னுத்துரை அவர்களுக்கு 1966ம் ஆண்டில்

திருமணம் நடைபெற்றது இதன் பயனாக இவர்களுக்கு மூத்த பெண்குழந்தையாக புஸ்பலதாவும் மற்றும் பத்மநாதன் அமரர் ஜெகநாதன் மற்றும் சிவலோகநாதன், திவாகரன், ஸ்ரீபாலன்(ஆசிரியர்) ஜெயலதா, பிரேமலதா, ஜெய்க்கந்தன், நிரஞ்சலா, சரத்பாபு ஆகிய குழந்தைச் செல்வங்களை அமரர் பொன்னுத்துரை திருவருட்செல்வி பொற்றெடுத்தனர். அமரராகிய இத் தம்பதிகள் திருவருட் செல்விக்கு சொந்தமாகிய இரட்டங்காலி முருகன் ஆலயத்திற்கு கிழக்கேயுள்ள திருவருட்செல்வியின் பரம்பரைக் காணியில் குடியிருந்து வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து வந்தனர். குசேலர் குடும்பம் போல் இருமண மொத்த தலைவன் தலைவியாராய்த் தம்மழலைச் செல்வங்களை வளர்த்து ஆளாக்குவதில் பட்டபாடு பெரும்பாடு "குசேலருக்கு கண்ணனின் கருணை கிடைத்தது போல" இவர்களுக்கு "முருகனின் கடைக்கண் கடாச்சம் கிடைக்கப்பெற்றது". கண்ணன் பெருளைக் கொடுத்தான் முருகன் அருளைக் கொடுத்தான் பொருளை விட "அருள் சிறந்ததன்றோ!"அருளில் திழைத்தவர்கள் உயிருக்கு ஊதியம் தேடினர். வெளியில் நாகம்மாளும் வினைதீர்க்கும் துணையாகத் தெளிவையும் திருப்தியையும் அள்ளிக் கொடுத்தாள். துள்ளித் திரிந்த காலத்தும் பள்ளிக்குச் சென்ற காலத்தும் பிள்ளைகள் கோயிற் சூழலிலும் ஆடியும் பாடியும் அன்னை இட்டதையும் தந்தை தந்தையையும் பகிர்ந்தும் உணர்ந்தும் நிமிர்ந்தும் வளர்ந்தனர்.

"குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடி தற்றுத் தான்முந் துறும்"

என்ற பொய்யா மொழியின் படி தெய்வம் அமரர் பொன்னுத்துரை திருவருட் குடும்பத்தின் முயற்சியையும் சிரத்தையும் திருவினையாக்கிய தும் அமரர் பொன்னுத்துரை அவர்கள் தன்னுடைய பிள்ளைச் செல்வங்களை வளர்ப்பதற்காக "அவர் உழைத்து உழைப்பும் அவரது உடல் அடித்த அடியும் அவரது மாடுகளும் மாட்டு வண்டிகளுக்கும் சாதி மதம் இனம் பாராத அவ்வூர் மக்களுக்கும் தான் தெரியும். தனது பிள்ளைச் செல்வங்களுக்காக அல்லும் பகலும் கண் விழிக்காது. ஒரு நேரம் கூடி எனது தந்தையார் நிம்மதியாக நித்திரை கொண்டதையோ நாம் அறியோம். அவ்வாறாக தனது உடலினை

வருத்தி பிள்ளைச் செல்வங்களுக்காகவும் ஆரம்பத்தில் தண்ணீர் வண்டில் ஒன்றையும் பொருட்கள், பொதிகளை ஏற்றுவதற்காக பிறிதொரு வண்டில் மாடுகளையும் அவர் சொந்தமாக வைத்திருந்தார். தந்தையாரின் வண்டில் மாடுகள் வங்களாவடிப் பாலம் சென்று கொண்டிருக்கும் என்றால் ஊர் மக்களுக்கு தெரிந்து விடும். புங்குடுதீவு/நயினாதீவு பல. நோக்கு கூட்டுறவு சங்க நிவாரண பொருட்கள் இன்றைக்கு வரப்போகுது என்று ஊர்மக்கள் அறிந்து விடுவார்கள். அவ்வாறாக எனது தந்தையார் நயினாதீவு பல. நோ. கூட்டுறவுச் சங்கக் கிளை மொத்தக் கிளையின் காவலாளியாகவும் "நேர்மைக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக" பல ஆண்டகள் கிட்டத்தட்ட "முப்பது வருடங்களுக்கு மேல்" தனது வண்டில் மாடுகளினால் பொருட்களைச் சுமந்து தரம் பிரித்து ஏனைய கிளைகளுக்கும் ஏனைய வண்டில் மாடுகள் வைத்திருந்த எனது ஊரார்கள், உறவினர்கள், உறவினர்களோடு போட்டி போட்டு கடினமாகத் தனது உடலை தனது பிள்ளைகளுக்காக அரும்பாடுபட்டு உழைத்த எனது தெய்வமாகிய (அப்பாவை) தந்தை "கடவுளுக்கு நிகரானவர் என்றால் மிகையாகாது".

இவ்வாறாக கடின உழைப்பினால் தனது பிள்ளைச் செல்வங்களையும், அன்பான பாசமான மனைவியையும் கண் கலங்காது பிள்ளைகளது தேவைகளான உணவுகள் உணவுப் பொருட்கள், உடுபிடவைகள், கற்றல் கற்பித்தலுக்குரிய தேவையான பொருட்கள் காசு (பணத்தினையும்) தனது இந்த சிறிய தொழிலின் மூலமே ஈடுசெய்து வந்தார். யாரிடமும் கடமைப் படாதவராக தன்னையும் தனது உடலினையும் "மெழுகுவர்த்தி" எவ்வாறு "உருக்கி வெளிச்சத்தையும் அந்த இருளையும்" எவ்வாறு போக்கியதோ அவ்வாறு மெழுகுவர்த்தியாகத் தான் எனது தந்தை தொழிற்பட்டார். இவ்வாறாக பிள்ளைகளும் ஓரளவு வளர்ந்து வரும் வேளையில் அமரரது "பாசமிகு துணைவி" திடீரென இரண்டு நாட்கள் நோய்வாய்ப்பட்டு இரண்டே நாட்களில் அமரரையும், பிள்ளைச் செல்வங்களையும் விட்டு விட்டு துணைவியார் மரணம் எய்தி விட்டார் இதுவும் அமரரின் வாழ்வில் மிக்க வேதனையை ஏற்படுத்தியது.

அது மட்டுமல்லாது "பிள்ளைகளின் பெருவாழ்வைக் கண்டு பெருமிதடையமுன் பிரிந்து விட்டாள் என்ற எண்ணம் பிள்ளைகளின் மனதையும் பிய்த்து ஒடுக்குகின்றது. அமரர் தந்தையார் சின்னத்துரை + பொன்னுத்துரை அவர்கள் தனது ஓரளவு இளமைக் காலத்தில் தனது பிள்ளைச் செல்வங்களுக்கு திருமணத்திற்காக "கப்பலிலும் ஆகாய விமானத் திலும் கூட ஓடோடி பறந்து சென்றார்". அமரரின் கால் பதித்த இடங்கள் துறைமுகங்கள் பலவாகும். என்று சொன்னால் மிகையாகாது. மூத்த பெண் பிள்ளையை சொந்த ஊரில் உறவினர் முறையில் திரு. இராசரத்தினம் கிருபாகரன் (இத்தாலி) என்பவரைத் திருமணம் செய்து வைத்து பேரன்களாக, மதுரன்(இத்தாலி) கிஷாந் (இத்தாலி), இளையமகள் ஜெயலலிதாவை தனது அயலூர் ஆகிய கரம் பொன் (ஊர்காவற்றுறை) தில்லையம்பலம் சக்திதரன் வர்த்தகர் (கொழும்பு) திருமணம் செய்து வைத்தார். அதன் பயனாக ஸ்ரீதரன் (சாயி) எனும் பேரனையும் மூன்றாவது மகளாகிய மருந்து என்று செல்லமாக தந்தையார் அழைக்கும் பிரேமலதாவை பக்கத்து ஊராகிய புங்குடுதீவைச் சேர்ந்த திரு. சிவானந்த லிங்கம் சிவரூபன் (கனடா) ஆகியோரை திருமணம் செய்ததன் பயனாக பேரன்களாகிய காவியன் (கனடா) ஓவியன் (கனடா) கடைசி மகள் நிரஞ்சலாவை தனது மைத்துனர் வழியல் செந்தில்நாதன் + புகழேந்திரன் (இந்தியா) திருமணம் செய்து வைத்தார். தனது மூத்த ஆண்பிள்ளையான மகனை பக்கத்து ஊராகிய வேலணையைச் சேர்ந்த பரமசொரூபிக்கு திருமணம் செய்து வைத்ததன் பயனாக விதுசிகன், தனுசிகன், ஜனுசிகன், யாதவன் ஆகிய பேரன்களையும் இரண்டாவது மகன் அமரர் ஜெகநாதனுக்கு யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த பழனிவேலு வடிவாம்பிகைக்கு திருமணம் செய்து வைத்ததன் பயனாக ஐஸ்வர்யா, லாவன்ஜா, குகப்பிரியன் ஆகிய பேரன் பேர்த்திகளையும் மூன்றாவது மகன் சிவலோகநாதனை பக்கத்து ஊராகிய புங்குடுதீவைச் சேர்ந்த சுமேந்திராதேவிக்கு திருமணம் செய்து வைத்ததன் பயனாக மதுசன், மதுசா ஆகிய பேரன் பேர்த்தியையும் நான்காவது மகன் திவாகரனை தனது உறவினர் குணரெத்தினம் நிர்மலதாவுக்கு திருமணம் செய்து வைத்தார். ஐந்தாவது மகனை ஸ்ரீபாலனை (ஆசிரியர்) இவரை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரகுநாதன்

ரோகிணிக்கு திருமணம் செய்து வைத்ததன் பயனாக லக்சியன் என்ற பேரனையும் ஆறாவது மகன் ஜெயக்காந்தனுக்கு (சுவிஸ்) யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்த அம்பிகைபாகர் சகீலாவையும் திருமணம் செய்து வைத்தார். ஏழாவது மகன் சரத் பாபு (முரளிதரன்) தந்தையைத் தெய்வமாக தந்தை நோயுற்று சுகயீனமுற்றபோது தந்தையின் கடனை "கண் இமை காப்பது போல்" கலங்காமல் இறுதிவரையும் தந்தையுடன் கூட இருந்து அவரின் கடமைகளை சிறப்பாகச் செய்து வந்தார். எமது தந்தையார் சைவ நெறிவிதிப்படி ஆலயங்களில் திருவிழாக்கள் திருவெம்பாவை பூஜை ஆலயங்களுக்கு, கொட்டகை அமைத்தல், தண்ணீர் பந்தல் அமைத்தல், ஆலயங்களுக்கு பொருட்களை ஏற்றுதல் ஆகிய சரியைத் தொண்டிலும் ஆர்வமுடையவராக விளங்கினார்.

அமரர் எனது தந்தையார் இவ்வையகத்தின் ஒருவருக்கு "பிறப்பு இறப்பும்" தெய்வத்தினால் நிர்ணயிக்கப்பட்டது. ஆதலால் எனது தெய்வ மாகிய பிதாவினுடைய (தந்தையினுடைய) ஆன்மா நயினை நாகபூசணி அம்மனின் பாதக் கமலத்திலும் அவர் தம் பரமனின் பாதக் கமலத்திலும் நூறு ஆண்டுகோடி ஆசீர்வதிக்க வேண்டுமென துதித்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

அந்த ஆத்மாவின் நிவேதனத்திற்காக ஆராதனை செய்வதை பிள்ளைகள் தங்கள் பேறாகக் கருதுவார்களாகுக!

வந்திப் போர் நினைத்தபடி மயிலேறி அயிலெடுத்து வரும் செவ்வேளைச் சிந்திப்போம் மலர் சொரிவோம் அவன் கமலத்தாளும் சிந்திப்போம் ஆதலினால் நம் பழவினைகள் யாவும் சிந்திப்போமே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



# நாகபூஷணியம்மை தோத்திரம்

-நயினை இல்லற ஞானி க. இராமச்சந்திரா

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வொன்றோ கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்றோ கருதவில்லை
உண்மையை யான் ஒரு போதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே இந்தக்
தரணியில் சாந்தியையே தருவாய் நீயே

முந்நாளில் முருகனுக்கு சக்தி யீந்தாய்
முனிவர்க்குந் தேவர்கட்கும் முதன்மை யீந்தாய்
பிந்நாளில் சங்கார்க்கும் பெருமை யீந்தாய்
பேரின்பக் காதல் வளம் பெருக வைத்தாய்
இந்நாளில் இராமகிருஷ்ணர் ரமணர் போன்ற
இணையற்ற ஞானியரை உலகுக் கீந்தாய்
இந்நாட்டைச் சொந்தமென்றும் இரு இனத்தார்.
இணங்கி வாழ்ந்திடச் செய்தால் அரிதோ அன்னாய்

விண்ணிலிருந்து குண்டெயறியும் வெறியர் கூட்டம்
வேரோடிப் புவியைவிட்டு மறைய வேண்டும்
அண்ணலார் காந்தி சொன்ன அஹிம்சா தர்மம்
அவனியை ஆள்பவருள்ளத்தை ஆள வேண்டும்
மண்ணுலகில் சகோதரத்துவம் மரிய வேண்டும்
மக்களெல்லாம் வறுமையின்றி வாழ வேண்டும்
சண்ணுவார் தமைக்காக்க நயினை மேவும்
நாகபூசணி அருள் நீ பாலிப்பாயே

# நயினைநாகபூசணி "அமுத சுரபி" அன்னதான சபை குறித்து பாடப்பட்ட பாட்டுக்கள்

மணித்தீப மெனும் நயினை தீவுநனி
வாழியதில் மகிழ்ந்து கோவில்
பிணிப்பிறவி யறுப்பதற்காக கொண்டுயரும்
அரவணிந்த பெரியாள் வாழி
கணித்திதுவே பேரமென் றன்னதானம்
செய்யும் கருத்தோர் வாழி
அணித்தெனவே யார்க்குமனம் தருமமுத
சுரபியல்லம் அலர்ந்து வாழி.

-கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜெகநாதன்

அன்புள நீர் அகலமெலாம் பொங்கப் பொங்க
அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்ற ஆற்றத்
தொண்டு செயப் பலவன்பர் தோன்றத் தோன்ற
தோற்று சுவை சோறாக உண்ண உண்ண
கண்டு வரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப
கடியமுத சுரபியினாள் ஊட்ட ஊட்ட
கொண்டு பசி தீரத்தவர்கள் கோடி கோடி
கோடானு காலமெலாம் வாழி வாழி.

-நயினை கவி நாக சண்முகநாதம்பிள்ளை

ஒரு காலிருக்க ஒளியோன் எரிக்க
உதவாது நிற்க வருணன்
மறுகால் நிறுத்தி ஒரு நாளிகைக்குள் வளர்
அன்னதான நிலையம் தருமாறு அமைத்த தகவீர
மைந்தர் தனையீன்ற நாடு நயினை

– நயினை கவி கஸ்தூரி ஆ. இ. ராமுப்பிள்ளை

## நயினைக் கவி நா. க. சண்முகநாதப்பிள்ளை இயற்றிய
## நயினாதீவு இரட்டங்காலி ஸ்ரீ முருகமூர்த்தி
## திரு ஊஞ்சற்பா

வந்திப்போர் வினைகளெல்லாம் நீக்குமையன்
வாரணமா முகம்பொலியும் வள்ளல்துன்பம்
சிந்திப்போம் படியருளும் படி செய்யபாதன்
திகழு பிரணவ வடிவமான சீலன்
தந்திமுகத் தொருகோடு கையிலேந்திக்
தாழ்வரையிற் சரிதை பொறி தமிழோன் பாதம்
சிந்திப்போம் நயினைவளர் இரட்டங்காலித்
திருமுருகன் மீதூஞ்சற் பதிகமோத

நந்திகண நாதர் முழ விசைத்து ஆட
நாரதர் தும்புரு நரம்பு மீட்டியாட
அந்தரம் தூர்த் தமரர்களி நடமேயாட
ஆனந்த வெள்ளந்தி வடியார் ஆட
முன்பு நின்று வாணிதிரு முறையோபாட
எந்தை சிவ குருபரவெம் மிரட்டங்காலி
இளமுருக வள்ளலே யாடிரூங்சல்

உலகெலாம் பரந்தபே ரொளியேயாகி
ஓம் என்ற ஓங்கார நாதமாகி
அலகில்லா விளையாட்டு ஆற்றுந் தெய்வ
ஆண்மையொடு அழகும் பேரருளுங் கொண்டு
தலமெல்லாம் நீநின்றாய் தனிலேலோடு
தாயானாய் சேயானாய் தானுமானாய்
இலமென்ற அடியவர்க்கு இரட்டங்காலி
இளமுருக வள்ளலே ஆடிருஞ்சல்

எழில் மிருமூன்றுஞ் சுடர்கள் வீச
இலங்கிலைவேல் பகைகடிந்து எழிலே கொஞ்சக்
கழிபெருகு மிருமூன்றுங் சுடர்கள் வீச
கடம்பு அசைந் தனிமார்பிற் காட்சியோங்க
அளிமுரளும் மாலையென அசைந்து ஒலகி
அருளுவாம் தெய்வானை வள்ளியாட
எழில் பெருக்கி யாடல் புரி யிரட்டங்காலி
இளமுக! வள்ளலே! ஆடிரூஞ்சல்

திட்டவரு மருட்செல்வ மடியார்க் குந்தன்
திருவதன முகங்காட்டித் திருவுங்காட்டி
மானனையாள் வள்ளியொடு மயில் மீதேறி
விரட்டிடுவாய் ஊழ்வினையின் விகற்பமெலாம்
வீடுபெற ஏறு நடை விதிப்பாய் எங்கோ
இருட்டுவழி ஒளிவிளக்கே இரட்டங்காலி
இளமுருக! வள்ளலே யாடிரூஞ்சல்

ஏறு மயிலேறி விளையாடும் வேலா
ஈசனுமை பாலகனே இறவா வாழ்வே
கூறுபடச் சூர்பிளந்த குமார குகனேகோவே
மாறுபடு முலகவாழ் வதனின் மாய்ந்து
மடியுமுனம் மலரடிக்கே சேவைசெய்ய
ஈறில்லாப் பதந்தருள்வாய் இரட்டங்காலி
இளமுருக வள்ளலே யாடிரூஞ்சல்

துள்ளிவரு வேற்படையே துணையாய் நிற்கத்
தூயமனத் தொண்டரர் குழாம் சுற்றநிற்ப
அள்ளிவரு மருட்செல்வம் அறமேயாக
ஆறுமுகா நின்நினைவே எண்ணமாக
கொள்ளவரு வினைகளையான் வெல்லவேண்டிக்
குவலயத்தில் தவங்கிடவேன் குமராவுந்தன்
எல்லையிலா அருள் தருவாய் இரட்டங்காலி
இளமுருக வள்ளல யாடிரூஞ்சல்

இல்லையென இரப்போர்க்கு இயம்பா நெஞ்சம்
இரவு பகல் நின்னடியார்க் கியற்றுஞ் சேவை
தொல்லை யெழு பிறிவியிலுந் நோய்கள்
தொழுதழுது சுரக்கின்ற கண்ணீர் வெள்ளம்
அல்லுறுத் தானந்தமான வாழ்வு வேண்டி
ஆவலோடு பெறநின்றேன் அகத்தினடவைர
எல்லையிலே வந்தருள்வாய் இரட்டங்காலி
இளமுக வள்ளலே யாடிரூஞ்சல்

பண்டுலக வழக்கொழிந்து பரவுங்கொள்ளைப்
பக்தி நெறி பழவினையாய் பழிப்பாயெண்ணிக்
கொண்டவரு கலியுகத்தின் கோலமற்றக்
குவலயத்திற்கு குருபரனாய் குருவாய் நின்றாய்
வென்றுலகை விஞ்ஞான விளைவுமானாய்
என்று முளதபயமைய உணராதக் குணர்வுமானாய்
இளமுருக வள்ளலே யாடிரூஞ்சல்

செந்தமிழ் தீஞ்சுவையுணர்ந்து வனமேயேகித்
திகர் நாவல் மரமெறியவ் வைக்கன்று
வந்து சட்ட பழமீந்த வடிவேலைய
வருவினைள் வருந்திடுவேல் வலத்தின் வாங்கி
நொந்துருகு மடியாரை வாட்டும் வெய்ய
நோவகற்றி யருள் பொலிய ஊசலேறி
இன்றெமக்காய்த் திருவருளோ டிரட்டங்காலி
இளமுருக வள்ளலே யாடிரூஞ்சல்

அன்று திருமுருகாற்றுப்படையை யோதி
ஆவலித்த நக்கீரற் காகவேகிச்
சென்றுபிலமடைந்தங்கு புதத்துற்ற
இருபாத மலரிறைஞ்சு மடியார் வேண்ட
இன்று பொலிந் தருள் நயினை யிரட்டங்காலி
இளமுருகன் வள்ளலே யாடீரூஞ்சல்
ஆறுபடைவீடுடைய அழகன் வாழ்க
அருள்பொலியும் வள்ளி குஞ்சரியாள் வாழ்க
கூறுபடச் சூர்பிளந்த படையும் வாழ்க
குலவுமயில் சேவல் நலங்கூட வாழ்க
வீறுபுக லவனடியார் மேன்மேல் வாழ்க
விரும்பு மன்னபூரணியாள் விறலும் வாழ்க
ஈறில் புகழ் பெற்றுலகம் இனிது வாழ்க
எங்கும் வேள்திருநாமம் வாழ்க! வாழ்க!!

# முருகப் பெருமானின் திருநாமங்கள்

| | | |
|---|---|---|
| சரவணன் | - | சரவணப் பொய்கையில் வளர்ந்தவன் |
| காங்கேயன் | - | கங்கை நதியால் சரவணப் பொய்கைக்குஅ எடுத்துச் செல்லப்பட்டவன். |
| கார்த்திகேயன் | - | கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட வன். |
| குகன் | - | பக்தர்களின் இருதயமாக குகையில் வசிக்கப் பட்டவன். |
| ஸ்கந்தன் | - | சிவஜோதியிலிருந்து பொறிகளாகப் புறப்பட்ட வன். |
| ஷண்முகன் | - | ஆறுமுகத்தை உடையவன். |
| சுவாமிநாதன் | - | தந்தை சுவாமிக்கு உபதேசமம் செய்தவன். |
| சிவகுரு | - | சிவனுக்கு குருவாக இருந்து உபதேசம் செய்தவன். |
| கடம்பன் | - | கடமபமலை விரும்பியணிபவன் |
| தணிகாசலம் | - | தணிகை மலையில் கோபம் தணிந்து இருப்ப வர். |
| பழனி | - | முருகனே பழமாக இருப்பவர். |
| வரதம் | - | பக்தர்கள் கேட்கும் வரங்களை கொடுப்பவன். |
| வேலன் | - | சக்தி வேலை ஆயுதமாக வைத்திருப்பவன். |
| குமரன் | - | என்றும் வாலிபன் இளைஞன். |
| மருகோன் | - | விஷ்ணுவின் மருமகன் |
| அக்னிப்பூ | - | ஆறுபொறிகளில் இருந்து உண்டானவன். |
| கந்தன் | - | தோள் வலிமை மிக்கவன் |
| முருகன் | - | அழகன், இனிமையானவன். |
| சுப்பிரமணியன் | - | பிரமத்தில் உதித்தவன் |
| குமாரசாமி | - | சிவனின் குமாரன் |
| குன்றெிந்தோன் | - | கிரவுஞ்ச மலையை வேலால் பிளந்தவன். |
| செவ்வேள் | - | சென்னிறம் உடையவன் |
| சேயோன் | - | இளமையுடையவன். |
| தேவசேனாதிபதி | - | தேவர்களின் தலைவன் |
| தண்டாயுத பாணி | - | தண்டத்தை ஆயுதமாக உள்ளவன். |

| | | |
|---|---|---|
| வேலாயுதன் | - | வேல்படையை ஆயுதமாக உடையவன். |
| முத்தையன் | - | நீரிலே தோன்றும் முத்தைப் போல் இயற்கை ஒளியை உடையவன். |
| சேந்தன் | - | பூரணமானவன் |
| விசாகன் | - | விசாகநட்சத்திரத்திலே தோன்றியவன். |
| சுவாமி | - | அகில உள்ளங்களையும் அதில் உள்ள உயிர் களையும் சொந்தமாக உடையவன். |
| பாவகி | - | அக்கினியை உடம்பாக உடையவன் |
| வாகுலேயன் | - | கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன். |
| சோமஸ்கந்தன் | - | சிவன் உமையின் நடுவில் வீற்றிருப்பவன். |
| சசிவாகனன் | - | மயில்வாகனன் (சசி -மயில்) அக்கினியில் பிறந்த திருவுருவம் |
| உமாசுதன் | - | உமையம்மையின் குமரன் |
| வரோதயன் | - | வரத்தால் தோன்றியவன். |

## பொன் மொழிகள்

**வாயில் வருவதையெல்லாம் கொட்டாதே**
**கொட்டிய பிறகு பொறுக்க இயலாது.**

**மற்றவனிற்கு நலமாயிரு நீ நலமாகுவாய்.**

**உன்னை தன்னைவிட உயர்த்துகின்றவன்**
**தான் உன் உண்மையான நண்பனாகுவான்.**

**பிறர் பேசியதை விட நீ பேசியதை**
**நினைவில் வைத்துக் கொள்.**

**நீ செய்ய இயலாவிட்டாலும் செய்தவற்றைப் பேணு.**

**நீ செய்வது உனக்குச் செய்யப்பட்டால்**
**என்று யோசித்த பிறகு செய்.**

**உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை**
**உபத்திரவம் கொடாதே.**

**உன்னுடையதை பொது வாக்கு**
**பொதுவானது உன்னுடையதாகும்.**

# நயினை செம்மனத்தம்பலம் ஸ்ரீ வீரகத்தி விநாயர் திவூஞ்சல்
## (ஆக்கம்: கவிமணி வே. செல்வநாயகம்)

### காப்பு
### விருத்தம்

குளங்களிய திருமுதற்பொருளே யான
கூரிய மருப்புடையாள் ஏதம் போற்ற
வளங்கனியுஞ் செந்தமிழு மாக்கஞ் சேரும்
உளங்கனியக் கணபதியை யுளத்தே கொண்டு
ஊஞ்ச லெனப் பாடிடவே யொப்பொன்றானி
விளங்க வரும் செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநாய கன்றான் காப்பதாமே.

தேசொளி மன்புருவே தூண்க ளாகத்
திகழரிய நிறைவீரம் விட்டமாக
மசொளரிய நற்றொண்டே கயிற தாக
மாட்சி நிறை நேரிதயம் பலகை யாக
ஆசொழி உண்மையதா லமைந்த வூஞ்சல்
ஆமதனில் வீற்றிருந்து நயினை மேவி
வீசொளிரச் செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்

கிருபுருவர் கந்தவருவர் கீதம் பாடக்
கீர்த்திநிறை யாரம்பையர்க நடனமாட
இம்பரெலா முன்னரளிற் தோய்ந்து கூட
இந்தமிழோ டகத்தியரு முன்னே போற்ற
வும்பரெலா மிகையாகாது வூஞ்சல் கண்டு
வளமகிழ்ந்து வுனைநோக்க வுவந்து கொண்டு
விம்புளவாம் செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநாயகர் ஆடிரூஞ்சல்
ஆதவனே டாம்மதியம் கவிதை தாங்க
ஆயகலை வேதமெலா மழகு வோங்கச்

சீதவளத் தண்டவரளக் குடைக ளோங்கத்
தேவகண நபதர்களும் வடதொட்டாட்ட
மாதவனு மருகாக வந்து வாழ
மாண்பு தரு மூஞ்சல் மிசை மகிழ்ந்து வீற
வேதவழும் செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநாயகரே யாடீரூங்சல்.

ஆண்டுகலை புதலத்தி லாக்க மீய
அன்பு நெறி யுளதாகு மின்பு தோய
பூண்டு துயர் சேராது செல்வஞ் சேர்ந்து
பொங்குபுகட் சிவன் சிலையுந் தமிழும் வேய்ந்து
காண்டகுசீர்க் கருணை வெளங் கனிந்து பாயக்
கருத்தொருமித் தடியவர்க்க ளுண்மை தோய
வேண்டு தவிச் செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநயாகரே யாடீரூஞ்சல்.

முத்தி தரும் முக்கணனார் மைந்த னாகி
மூர்த்தியருள் முதற் கடவுள் தேவுமாகிச்
சித்தி தரும் பேறு தவிச் செழித்து வீசுத்
தென்றலொடு விருநிதியம் செறிந்து வாச
பக்தி தரும் நயினைநகர் பாங்கு மேவிப்
பண்டி தரு விளைவுகளும் பூசை யோங்க
வித்தை தரும் செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

தெளிதேனும் மின்கரும்பும் சேர்த்ததான
செந்தமிழின் சுவையுண வாய்த் தேடிஞான
வொளிதேடப் பாமகளு முயர்ச்சி யூட்ட
வோங்கியுறை யன்பருள முயத்து நாட்டக்
களிதேட வளமருளுங் காத லாகக்
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்.

கீதையருள் கண்ணனது மருக ராகக்
கீர்த்தி தர வாடநின்றுன் சித்தி ராகத்

தாதையொடு இந்திரன் பூமாரி தூர்ப்பத்
தகுமுரச வாத்தியங்ன ளார்ப்ப வார்ப்புக்
காதையருள் வேத முனிகருதி யார்ப்க்
கதியருளங் கணபதியே யருகு தோன்றி
வேரதயகல் செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

இலகுசிவ நெறியொளியே யெங்கு மோங்க
இன்சுவைத்தீந் தமிழ்ப்பயனே யிறைமை தாங்க
உலகுவழி நின்னருளே யுண்மை யோங்க
வொப்பரிய வன்புருவே யுறதி யோங்கப்
பண்பு தரு மாக்க மெலாம் பாரிலீந்தே
விலகாது செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநாயகரே ஆடிரூஞ்சல்

ஏற்ற மருள விக்கினரே யாடீரூங்சல்
ஏரம்ப மூர்த்தியரே ஆடீரூஞ்சல்
உற்ற நிறை யொயொண் பெருளே யாடீரூஞ்சல்
ஓங்கார வடிவேநீ ராடீரூஞ்சல்
தோற்றமுயர் வேழமுகா வாடீ ரூஞ்சல்
வீற்றருளச் செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

சாதியருள் வாழிசிவ சமயம் வாழி
தோன்று திரு நீறுங்கண்டி கையும் வாழி
நீதியுள மன்னவர் செங்கோலும் வாழி
நீட்டுவளம் மழைமுகிலி ளிரையம் வாழி
ஆதியுள வள் சுரபி யனைத்ம் வாழி
வேதியணை செம்மணத்தம் புலத்தே வாழும்
வீரகத்தி விநாயகரே யாடிரூஞ்சல் .

உ
சிவமயம்



## திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை யிலும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே -எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சி வாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி

நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விரும மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தோனூறு நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்மை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.





# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ



# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அஷ்டோத்தர சத நாமா வளி.

01. ஓம் ஸ்ரீ சத்ய சாயி பாபாய நம;
02. ஓம் ஸ்ரீ சத்ய ஸ்வரூபாய நம
03. ஓம் ஸ்ரீ சத்ய தர்ம பாராயணாய நம;
04. ஓம் ஸ்ரீ வரதாய நம;
05. ஓம் ஸ்ரீ சத் புருஷாய நம;
06. ஓம் ஸ்ரீ சத்ய குணாத்மனே நம;
07. ஓம் ஸ்ரீ சாது வர்த்தனாய நம;
08. ஓம் ஸ்ரீ சாது ஜன போஷணாய நம;
09. ஓம் ஸ்ரீ சர்வக் ஞாய நம;
10. ஓம் ஸ்ரீ சர்வ ஜன ப்ரியாய நம;
11. ஓம் ஸ்ரீ சர்வ சக்தி மூர்த்தயே நம;
12. ஓம் ஸ்ரீ சர்வேசாய நம;
13. ஓம் ஸ்ரீ சர்வ சங்க பரித் யாகினே நம;
14. ஓம் ஸ்ரீ சர்வாந்தர் யாமினே நம;
15. ஓம் ஸ்ரீ மஹிமாத்னே நம;
16. ஓம் ஸ்ரீ மஹேஸ்வர ஸ்வடுபாய நம;
17. ஓம் ஸ்ரீ பர்த்தி கிராமோத் பவாய நம;
18. ஓம் ஸ்ரீ பர்த்தி க்ஷேத்ர நிவாசினே நம;
19. ஓம் ஸ்ரீ யசாய ஷிர்டி வாசினே நம;
20. ஓம் ஸ்ரீ ஜோதி ஆதி பல்லி சோமப்பாய நம;
21. ஓம் ஸ்ரீ பரத் வாஸ ரிஷி கோத்ராய நம;
22. ஓம் ஸ்ரீ பக்த வத்சலாய நம;
23. ஓம் ஸ்ரீ அபாந்தராத்மனே நம;
24. ஓம் ஸ்ரீ அவதார மூர்த்தயே நம;
25. ஓம் ஸ்ரீ சர்வ பய நிவாரிணே நம;
26. ஓம் ஸ்ரீ அபஸ்தம்ப சூத்ராய நம;
27. ஓம் ஸ்ரீ அபய ப்ரதாய நம;
28. ஓம் ஸ்ரீ ரத்னாகர வம்சோத்பவாய நம;
29. ஓம் ஸ்ரீ ஷிர்டி சாயி அபேத சக்தி அவதாராய நம;
30. ஓம் ஸ்ரீ சங்கராய நம;
31. ஓம் ஸ்ரீ ஓம் ஸ்ரீ ஷிர்டி சாயி மூர்த்தயே நம;
32. ஓம் ஸ்ரீ துவாரகா மாயி வாஸினே நம;
33. ஓம் ஸ்ரீ சித்ராவதி தட புட்பர்த்தி விஹாரினே
34. ஓம் ஸ்ரீ சக்தி ப்ராய நம;
35. ஓம் ஸ்ரீ சரணாகத் த்ராணாய நம;
36. ஓம் ஸ்ரீ ஆந்தாய நம;

37. ஓம் ஸ்ரீ ஆனந்த தாய நம;
38. ஓம் ஸ்ரீ ஆர்த்த த்ராண பராயணாய நம;
39. ஓம் ஸ்ரீ அனாத நாதய நம;
40. ஓம் ஸ்ரீ அஸஹாய சகயாய நம;
41. ஓம் ஸ்ரீ லோக பாந்தவாய நம;
42. ஓம் ஸ்ரீ லோக ரக்ஷா பராயணாய நம;
43. ஓம் ஸ்ரீ லோக நாதய நம;
44. ஓம் ஸ்ரீ தீன ஜன போஷணாய நம;
45. ஓம் ஸ்ரீ மூர்த்தி த்ரய ஸ்வரூபாய நம;
46. ஓம் ஸ்ரீ முக்தி ப்ரதாய நம;
47. ஓம் ஸ்ரீ கலுஷ விதூர ராய நம;
48. ஓம் ஸ்ரீ கருணாகராய நம;
49. ஓம் ஸ்ரீ சர்வா தாராய நம;
50. ஓம் ஸ்ரீ சர்வ ஹ்ருத வாசினே நம;
51. ஓம் ஸ்ரீ புண்ய பலப்ரதாய நம;
52. ஓம் ஸ்ரீ சர்வபாப க்ஷயகராய நம;
53. ஓம் ஸ்ரீ சர்வ ரோக நிவாரிணே நம;
54. ஓம் ஸ்ரீ சர்வ பாத ஹராய நம;
55. ஓம் ஸ்ரீ அனந்த நுத கூர்த்ருணே நம;
56. ஓம் ஸ்ரீ ஆதி புருஷாய நம;
57. ஓம் ஸ்ரீ ஆதி சக்ததயே நம;
58. ஓம் ஸ்ரீ அபரூப சக்தினே நம;
59. ஓம் ஸ்ரீ அவ்யக்த ரூபிணே நம;
60. ஓம் ஸ்ரீ காம க்ரோத த்வம்ஸினே நம;
61. ஓம் ஸ்ரீ கனகாம்பர தாரிணே நம;
62. ஓம் ஸ்ரீ அற்புத சர்யாய நம;
63. ஓம் ஸ்ரீ ஆபத் பாந்தயவாய நம;
64. ஓம் ஸ்ரீ ப்ரேமாத்மனே நம;
65. ஓம் ஸ்ரீ ப்ரேம மூர்த்தயே நம;
66. ஓம் ஸ்ரீ ப்ரேம ப்ரதாய நம;
67. ஓம் ஸ்ரீ ப்ரியாய நம;
68. ஓம் ஸ்ரீ பக்த ப்ரியாய நம;
69. ஓம் ஸ்ரீ பக்த மந்தாராய நம;
70. ஓம் ஸ்ரீ பக்த ஜன ஹ்ருதய விஹாராய நம;
71. ஓம் ஸ்ரீ பக்த ஜன ஹ்ருதயாலயாய நம;
72. ஓம் ஸ்ரீ பக்த பராதீனாய நம;
73. ஓம் ஸ்ரீ பக்தி ஞான ப்ரதீபாய நம;
74. ஓம் ஸ்ரீ பக்தி ஞான ப்ரதீபாய நம;
75. ஓம் ஸ்ரீ சுக்ஞான மார்க்க தர்சகாய நம;

76. ஓம் ஸ்ரீ ஞான ஸ்வருபாய நம;
77. ஓம் கீத போதகாய நம;
78. ஓம் ஞான சித்தி தாய நம;
79. ஓம் சுந்தர ரூபாய நம;
80. ஓம் புண்ய புருஷாய நம;
81. ஓம் பலப்ராதாய நம;
82. ஓம் புருஷோத்தமாய நம;
83. ஓம் புராண பருஷாய நம;
84. ஓம் அதீதாய நம;
85. ஓம் காலா தீதாய நம;
86. ஓம் சித்தி ரூபாய நம;
87. ஓம் சித்த சங்கல்பாய நம;
88. ஓம் ஆரோக்ய ப்ரதாய நம;
89. ஓம் அன்ன வஸ்திர தாய நம;
90. ஓம் சம்சார துக்க க்ஷயகராய நம;
91. ஓம் சர்வாபீஷ்ட ப்ரதாய நம;
92. ஓம் கல்யாண குணாய நம;
93. ஓம் கர்ம த்வம்சினே நம;
94. ஓம் சாது மானஸ சோபிதாய நம;
95. ஓம் சர்வ மத சம்மதாய நம;
96. ஓம் சாது மாஸ பரிசோதகாய நம;
97. ஓம் சாதாகானுக்ரஹ வடவ்ருக்ஷ ப்ரதிஷ்டாப காய நம;
98. ஓம் சகல சம்சய ஹராய நம;
99. ஓம் சகல தத்வ போதகாய நம;
100. ஓம் யோகீஸ்வராய நம;
101. ஓம் யோகீந்த்ர வந்திதாய நம;
102. ஓம் சர்வ மங்கள கராய நம;
103. ஓம் சர்வ சித்தி ப்ராய நம;
104. ஓம் ஆபன் நிவாரிணே நம;
105. ஓம் ஆர்த்தி ஹராய நம;
106. ஓம் சாந்த மூர்த்தயே நம;
107. ஓம் கலப ப்ரசன்னாய நம;
108. ஓம் பகவான் ஷ சத்ய சாயி பாபாய நம;

# 108 ஐயப்ப சரண கோஷம்

1. சுவாமியே சரணம் ஐயப்பா
2. ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா
3. கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
4. சக்தி வடிவேலன் (ஆறுமுகன்) சோதரனே சரணம் ஐயப்பா
5. மாளிகைப்புரத்து மஞ்ச மாதாவே சரணம் ஐயப்பா
6. வாவர் சுவாமியே சரணம் ஐயப்பா
7. கருப்பண்ணை சுவாமியே சரணம் ஐயப்பா
8. பெரிய கடுத்த சுவாமியே சரணம் ஐயப்பா
9. சிறிய கடுத்த சுவாமியே சரணம் ஐயப்பா
10. வனதேவத மாறே சரணம் ஐயப்பா
11. துர்க்கா பகவதி மாறே சரணம் ஐயப்பா
12. அச்சன் கோவில் அரசே சரணம் ஐயப்பா
13. அனாத ரஷகனே சரணம் ஐயப்பா
14. அச்சம் தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா
15. அம்பலத்து அரசனே சரணம் ஐயப்பா
16. அபாய தாயகனே சரணம் ஐயப்பா
17. அகந்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
18. அஷ்டசித்தி தாயகனே சரணம் ஐயப்பா
19. அண்டினோரை ஆதரிக்கும் தெய்வமே சரணம் ஐயப்பா
20. அழுதையில் வாசனே சரணம் ஐயப்பா
21. ஆரியன்காவு அய்யாவே சரணம் ஐயப்பா
22. ஆபத் பாந்தவனே சரணம் ஐயப்பா
23. ஆனந்த ஜயோதியே சரணம் ஐயப்பா
24. ஆத்ம ஸ்வருபியே சரணம் ஐயப்பா
25. ஆத்ம ஸ்வருபியே சரணம் ஐயப்பா
26. ஆனைமுகன் தம்பியே சரணம் ஐயப்பா
27. இருமுடி ப்ரியனே சரணம் ஐயப்பா
28. இன்னலை தீர்ப்பவனே சரணம் ஐயப்பா

29. க்ஷேக பர சுக தாயகனே சரணம் ஐயப்பா
30. இருதய கமல வாசனே சரணம் ஐயப்பா
31. ஈடில்லாத இன்பம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
32. உமையவள் பாலகனே சரணம் ஐயப்பா
33. ஊமைக்கு அருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
34. ஊழ்வினை அகற்றுவோனே சரணம் ஐயப்பா
35. ஊக்கம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
36. எங்கும் நிறைந்தோனே சரணம் ஐயப்பா
37. எண்ணில்லா ரூபனே சரணம் ஐயப்பா
38. என் குல தெய்வமே சரணம் ஐயப்பா
39. என் குரு நாதனே சரணம் ஐயப்பா
40. எருமேலி வாழும் கிராத -சாஸ்தாவே சரணம் ஐயப்பா
41. எங்கும் நிறைந்த நாத பிரம்மனே சரணம் ஐயப்பா
42. எல்லோருக்கும் அருள் புரிபவனே சரணம் ஐயப்பா
43. ஏற்றுமானூரப்பன் மகனே சரணம் ஐயப்பா
44. ஏகாந்த வாசியே சரணம் ஐயப்பா
45. ஏழைக்கருள் புரியும் ஈசனே சரணம் ஐயப்பா
46. ஐந்து மலை வாசனே சரணம் ஐயப்பா
47. ஐயங்கள் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
48. ஒப்பில்லா மாணிக்கமே சரணம் ஐயப்பா
49. ஓம்கார பரம்ரம்பமே சரணம் ஐயப்பா
50. கலியுக வரதனே சரணம் ஐயப்பா
51. கண்கண்ட தெய்வமே சரணம் ஐயப்பா
52. கம்பன் குடிக்கு உடைய நாதனே சரணம் ஐயப்பா
53. கருணா சமுத்ரமே சரணம் ஐயப்பா
54. கற்பூர ஜ்யோதியே சரணம் ஐயப்பா
55. சபரிகிரிவாசனே சரணம் ஐயப்பா
56. சத்ரு சம்ஹார மூர்த்தியே சரணம் ஐயப்பா
57. சரணாகத ரக்ஷகனே சரணம் ஐயப்பா
58. சரண கோஷ ப்ரியனே சரணம் ஐயப்பா
59. சபரிக்கு அருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
60. ஷாம்புகுமாரனே சரணம் ஐயப்பா

61. சத்ய ஸ்வரூபனே சரணம் ஐயப்பா
62. சங்கடம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
63. சஞ்சலம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
64. ஷண்முகசோதரனே சரணம் ஐயப்பா
65. தன்வந்தரி மூர்த்தியே சரம் ஐயப்பா
66. நம்பினோரைக் காக்கும் தெய்வம சரணம் ஐயப்பா
67. நர்த்தன ராஜகுமாரனே சரணம் ஐயப்பா
68. பந்தள ராஜகுமாரனே சரணம் ஐயப்பா
69. பம்பை பாலகனே சரணம் ஐயப்பா
70. பரசுராம பூஜிதனே சரணம் ஐயப்பா
71. பக்த ஜன ரஷகனே சரணம் ஐயப்பா
72. பக்த வத்சலனே சரணம் ஐயப்பா
73. பரமசிவன் புத்திரனே சரணம் ஐயப்பா
74. பம்பா வாசனே சரணம் ஐயப்பா
75. பரம தயாளனே சரணம் ஐயப்பா
76. மணிகண்ட பொருளே சரணம் ஐயப்பா
77. மகர ஜ்யோதியே சரணம் ஐயப்பா
78. வைக்கத்து அப்பன் மகனே சரணம் ஐயப்பா
79. கானக வாசனே சரணம் ஐயப்பா
80. குளத்து புழை பாலகனே சரணம் ஐயப்பா
81. குருவாயூரப்பன் மகளே சரணம் ஐயப்பா
82. கைவல்ய பாததாயகனே சரணம் ஐயப்பா
83. ஜாதி மத பேதமில்லாதவனே சரணம் ஐயப்பா
84. சிவசக்தி ஐக்ய ஸ்வரூபனே சரணம் ஐயப்பா
85. சேவிப் போற்று ஆனந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
86. துஷ்டர பயம் நீக்குவோனோ சரணம் ஐயப்பா
87. தேவாதி தேவனே சரணம் ஐயப்பா
88. தேவர்கள் துயரத் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
89. தேவேந்திர பூஜிதனே சரணம் ஐயப்பா
90. நாராயணன் மைந்தனே சரணம் ஐயப்பா
91. நெய் அபிஷேகப் ப்ரியனே சரணம் ஐயப்பா
92. பிரணவ ஸ்ரூபனே சரணம் ஐயப்பா

93. பாப சம்ஹார மூர்த்தியே சரணம் ஐயப்பா
94. பாயசன்ன ப்ரியனே சரணம் ஐயப்பா
95. வன்புலி வாகனனே சரணம் ஐயப்பா
96. வரப்ரதாயகனே சரணம் ஐயப்பா
97. பாகவ தோத்மனே சரணம் ஐயப்பா
98. பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
99.மோகினி சுதனே சரணம் ஐயப்பா
100. மோகன ரூபனே சரணம் ஐயப்பா
101. வில்லன் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
102. வீரமணி கண்டனே சரணம் ஐயப்பா
103. சத்குரு நாதனே சரணம் ஐயப்பா
104. சர்வ ரோகநிவாரகனே சரணம் ஐயப்பா
105. சிச்சிதாந்த சொரூபியே சரணம் ஐயப்பா
106. சர்வா பீஷ்ட தாயகனே சரணம் ஐயப்பா
107. சாச்வாதபதம் அளிப்பவனே சணரம் ஐயப்பா
108.பதினெட்டாம் படிக்குடைய நாதனே சரணம் ஐயப்பா

## விளக்கேற்றுவதன் பயன்கள் எவை?

| | | |
|---|---|---|
| நெய் தீபம் | – | ஞானம் ஏற்படும் |
| நல்லெண்ணெய் தீபம் | – | எமபயம் அணுகாது |
| இலுப்பெண்ணெய் தீபம் | – | ஆரோக்கியம் |
| விளக்கெண்ணெய் தீபம் | – | சகல செல்வமும் கிடைக்கும் |
| ஒருமுக தீபம் | – | மத்திம பலன் |
| இரண்டு முக தீபம் | – | குடும்ப ஒற்றுமை தரும் |
| மூன்று முக தீபம் | – | புத்திர சுகம் தரும் |
| நான்கு முக தீபம் | – | பசு, பூமி, சுகம் தரும் |
| ஐந்துமுக தீபம் | – | செல்வம் பெருகும் |

# "நயினாதீவு பெற்றெடுத்த உத்தமர்"

"நயினாதீவு" நிலவளம், நீர்வளம், சைவமணங் கமழும் தீவாகும். அவ்வூரில் உலக மக்களால் போற்றப்படுகின்ற நயினை நாகபூசணி அம்பாள் அருள் பாலிக்கின்ற அந்த ஊரின்கண் பிறந்த அமரர் திரு.சின்னத்துரை பொன்னுத்துரை அவர்களது மறைவு எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. நாங்கள் வெவ்வேறு இடமாக இருப்பினும் எமது பாடசாலை ஆசிரியரான பின்னர் திரு. பொன்னுத்துரை ஸ்ரீபாலன் அவரையும் அவரது குடும்பத்தையும் அறியமுடிந்தது உயர்ந்த சைவப் பரம்பரையில் பண்பாண குடும்பத்தின் தலைவராக விளங்கினார்.

பொன்னுத்துரை திருவருட் செல்வி என்பவரை மணந்து இல்லறத்தை நல்லறமாக்கி பதினொருமகவுகளை பெற்று வாழ்வில் முழுமையடைந்தார்.

இப்பூமியில் அவதரித்தோர் மாமன்னராகிலும் காலனை வென்று நிலைத்தது போல் நீண்ட பல ஆண்டுகள் சாகாவரம் பெற்று வாழ்வதில்லை பிறப்பு என்பது அழுகுரல் கேட்கும் அது பிறந்த குழந்தையின் அழுகையின் பின் இறுதி மூச்சு விடப்பட்டதும் மீண்டும் இப்போ உறவினர் அயலவர் ஒன்றாக அழுது நிற்பர் பிறந்து அழுகையில் முடிவது தான் மனித வாழ்வு மடிந்ததும் அவரவர் செய்த பாவ புண்ணியத்தை பொறுத்தது என்பது வேதங்கள், புராண நூல்கண்ட முடிவு அன்பும் அரவனைப்பும் நிறைந்த தந்தை (பிதா) மறுபிறவியில் மாட்சியை பெற்று உயர் பதவி எய்தி உன்னத நிலையை அடைவர் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி வணங்குவோமாக.

***"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு***
***என்பு தோல் போர்த்த உடம்பு"***

**யா/ சன்மார்க்க மகாவித்தியாலயம்**
**யாழப்பாணம்.**

**அதிபர், ஆசிரியர்கள்**
**மாணவர்கள்.**

# கண்ணீர் அஞ்சலி

வையத்தில்
05
-
10
-
1937



விண்ணகத்தில்
23
-
11
-
2014

நயினாதீவு சனசமூக நிலைய அபிமானியும்,நிலைய ஆதரவாளரும்
நயினாதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்தவருமாகிய

அமரர்

## சின்னத்துரை பொன்னுத்துரை

அவர்களுடைய மறைவு குறித்து நிலையம் சாற்றும் கண்ணீர் அஞ்சலி

அன்பு நிறைந்த உன் சிரிப்பால் அனைவரையும் அரவணைத்தாய்
அன்பினால் எம்மையெல்லாம் இன்பத்தில் ஆடவைத்தாய்
துன்பம் துயர்மறந்து துடிப்புடன் நின்றவேளை
கள்ளத்தனமாக உன் உயிரை கவர்ந்து விட்டான் அந்தக் காலனவன்
அன்பு நிறைந்த உன் சிரிப்பை என்றுதான் காண்போம் இனி !

பாசத்தில் எம்மை எல்லாம் நனைய வைத்து
பல கதைகள் சொல்லி எம்மை மகிழவைத்து
அன்பு மொழியால் எம்மை அரவணைத்து
இன்று துன்பத்தில் மூழ்கவிட்டதேனையா?

பழகியோர்கள் உன்னையெண்ணி கதறிடவே
பாசமிகு மக்களை பரிதவிக்க விட்டு எங்கு சென்றாய்
எண்ணியெண்ணியே நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
உம்பாதத்திற்கு நிலையம் சாற்றும் கண்ணீரை
காணிக்கையாக்குகின்றோம்.

2ம் வட்டாரம்,
நயினாதீவு.

ஈடில்லாத உன் இழப்பால் கலங்கி நிற்கும்
நயினாதீவு சனசமூக நிலையம் (மத்தி)

பதிப்பு: விவேகானந்தா அச்சகம் - யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை பொன்னுத்துரை

நயினாதீவு, 2 ஆம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பொன்னுத்துரை 23.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -சின்னம்மர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி- மங்களநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருவருட்செல்வியின் அன்புக் கணவரும், புஸ்பலதா (இத்தாலி), பத்மநாதன்(கொழும்பு), காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் சிவலோகநாதன், திவாகரன், ஸ்ரீபாலன் (ஆசிரியர், சன்மார்க்க ம.வி), பகுதிநேரம் யா/உயரப்புலம் மெ.மி. வித்தியாலயம்) மற்றும் ஜெயலதா (கொழும்பு), பிரேமலதா(கனடா), ஜெயக்காந்தன் (சுவிஸ்), நிரஞ்சனா (இந்தியா), சரத்பாபு (முரளீதரன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாகரன் (இத்தாலி), பரமசொரூபி, வடிவாம்பிகை, சுமேந்திராதேவி, நிர்மலா, றோகினி, சக்திதரன் (கொழும்பு), சிவரூபன் (கனடா), சகிலா புகழேந்திரன்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனும், மதுரன் (இத்தாலி), கிஷாந் (இத்தாலி), விதுசிகன்,தனுசிகன், ஜனுசிதா, யாதவன், ஐஸ்வர்யா, லாவண்யா, குகப்பிரியன், மதுசன், மதுசா, லக்சியன், ஸ்ரீதரன், காவியன்(கனடா), ஓவியன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கோவிந்தபிள்ளை, விசாலாட்சி, நடராசா மற்றும் செல்லம்மா, நல்லதம்பி (சுவிஸ்), யோகாம்பிகை, சிதம்பரம் (சோதி-கனடா), சிவக்கொழுந்து, வரலட்சமி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான முத்துவேலு, சுந்தரமூர்த்தி, தனபாலசிங்கம், யோகநாதன், முத்துலிங்கம், பரமேஸ்வரி மற்றும் கந்தசாமி, தனலெட்சுமி, ஜீவானந்தம் (அமெரிக்கா), தனலட்சமி, புவனேஸ்வரி, அமிர்தகௌரி(கனடா), சிவகுருநாதன், செந்தில்நாதன் (இந்தியா), குலசபாநாதன், காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் ஞானசரஸ்வதி, வேதநாயகி, கிரிசாம்பாள் ஆகியோரின் மைத்துனரும், பரமேஸ்வரன், முருகதாஸ் (கனடா), விக்கினேஸ்வரி, பராபரிதேவி (இந்தியா), மகேஸ்வரி, பத்மலோஜினி, காலஞ்சென்றவர்களான நடராசா, மகாலிங்கம் மற்றும் கோகுலராசா ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நயினாதீவு, 2 ஆம் வட்டாரம்.**
**077 625 1572, 077 542 2964**

(41028) (4.5.3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியர் பொ.ஸ்ரீபாலன்
அவர்களின் அன்புத் தந்தை

## சின்னத்துரை பொன்னுத்துரை

அவர்களின் மறைவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(41482) (12.1)

நலன்புரிக் கழகம், யா/சன்மார்க்க ம.வி.

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை பொன்னுத்துரை (நயினாதீவு)



2 ஆம் வட்டாரம், நயினா தீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பொன்னுத்துரை 23.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2-ஆம் வட்டாரம், நயினாதீவு. நாவல்:

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் பொ.ஶ்ரீபாலன் அவர்களின் தந்தை

## சின்னத்துரை பொன்னுத்துரை

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்** (41534) (1646)

**யா/உ.யரப்புலம் மெதடிஸ்மிசன் வித்தியாலயம் - ஆனைக்கோட்டை.**



# நன்றி நவிலல்



அமரர்

## சின்னத்துரை பொன்னுத்துரை

அன்புடையீர்!

எமது அன்புத் தந்தையாரின் இழப்பைக் கேள்வியுற்று இந் நாட்டில் இருந்தும் நேரில் வந்தும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து தொலைபேசி, தந்தி, தபால், அனுதாப மடல்கள், கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தோருக்கும் எம் துயரில் இணைந்து கொண் டோருக்கும் மலர் வளையம் வைத்தும் பத்திரிகைகளில் பிரசுரித்த "பாடசாலை சமூகத்தினருக்கும்", யாழ்ப்பாணம், கொழும்பு, இத்தாலி, கனடா, சுவிஸ் ஆகிய இடங்களில் இருந்தும் எம் அன்புத் தந்தையாரின் இனபந்தங்களின் இல்லங்கள் சென்று அனுதாபம் தெரிவித்தோருக்கும் நயினாதீவு, யாழ்ப்பாணம் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் இறுதி மரணக் கிரியை களிலும் கலந்து கொண்டோருக்கும் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டு தந்த நல்லூர் மதிகலர்ஸ் அச்சகத்தினருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த சுற்றத்தார் உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றோம்.

**2ம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**இங்ஙனம்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

# வம்சாவழி

**சின்னத்துரை + சின்னம்மா**

- கோவிந்தப்பிள்ளை *
- நாகம்மா *
- விசாலாட்சி *
- பொன்னுத்துரை *
- செல்லம்மா
- சிவக்கொழுந்து
- நல்லதம்பி *(சுவிஸ்)*
- யோகம்பிகை
- சிதம்பரம் *(கனடா)*
- நடராசா *
- வரலட்சுமி *(அமெரிக்கா)*

பொன்னுத்துரை *

- புஸ்பலதா + கிருபாகரன்
  - மதுரன்
  - கிஷாந் *(இத்தாலி)*
- பத்மநாதன் + பரமசொரூபி
  - விதுசிகன்
  - தனுசிகன்
  - ஜனுசிகன்
  - யாதவன்
- * ஜெகநாதன் + வடிவாம்பிகை
  - ஐஸ்வர்யா
  - லாவண்யா
  - குகப்பிரியன்
  - யாதவி *(இந்தியா)*
- சிவலோகநாதன் + சுமேந்திராதேவி
  - மதுசன்
  - மதுசா
- திவாகரன் + நிர்மலதா
- ஸ்ரீபாலன் *(ஆசிரியர்)* + றோகினி
  - லக்சியன்

# ம்சாவழி

**துரைச்சாமி + மங்களநாயகி**

- * திருவருட்செல்வி
- புவனேஸ்வரி
- அமிர்தகெளரி *(கனடா)*
- சிவகுருநாதன்
- செந்தில்நாதன்
- குலசபநாதன்
- * தில்லைநாதன்
- ஞானசரஸ்வதி
- வேதநாயகி
- கிரிசாம்பாள்

கரன்
லதா

ஸ்ரீபாலன் *(ஆசிரியர்)* + றோகினி
→ லக்சியன்

ஜெயலதா + சக்திதரன்
→ ஸ்ரீதரன் *(சாயி)*

பிரேமலதா + சிவரூபன்
→ காவியன், ஓவியன் *(கனடா)*

ஜெயக்காந்தன் *(சுவிஸ்)* + சகீலா

நிரஞ்சலா + புகழேந்தி *(இந்தியா)*

சரத்பாபு

*** அமரர்களைக் குறிக்கும்**


MATHI
COLOURS
Nallur 021 2229285